முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த

மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 26 திகதி முதல்

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 03 திகதி வரை

(09.04.2023 ஞாயிறு முதல் 16.04.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அறமெனும் சக்திவரம் கூட்டிட
   அனைவரின் பசிபிணி விரட்டிட
   சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
   சற்குருவே ஆளுமுக அரங்கனே
2. அரங்கனே உமை போற்றியே
   அகத்திய மகரிஷியும் வாரஆசி
   வரங்களென இந்தியா தமிழகத்தில்
   வருங்கால பலனாக சுபகிருது சேல் திங்கள்
3. திங்களிலே இருபானாற் திகதி மேலாய்
   தக்கசோபகிருது தகர் திங்கள் சூலதிகதிவரை
   இங்கனமே நடக்கும் நிகழ்வாக உரைப்பேன்
   இதுகாலம் இந்தியா தமிழகத்தில் தன்னில்
4. தன்னிலே வெப்பநிலை பெருகியே
   தண்ணீர் தட்டுப்பாடு வறட்சி
   மண்ணுலகில் மிகுந்து பல கிராமமதில்
   மரணமிடர் போல சோடை காணும்
5. காணவே ஆளுமை சக்திகளும்
   கருணையை தயவை கரமதில்கொண்டு
   தானதரும வழி முறைகளை பெருக்கி
   தக்கபடி மக்களை சென்றடையும் வண்ணம்

6. வண்ணமுடன் தொண்டாற்றியே
வறுமை போக்கிடும் வளர்ச்சிப்பாதையாக
எண்ணமதில் ஆளுமைகள் கொண்டு
இயங்கியே நம்பிக்கையான வாழ்வைதரும் வண்ணம்
7. வண்ணமுடன் ஆளுமைகள் சிறந்திட
வையகமே வியக்க மாற்றம் காணும்
எண்ணம் தூய்மைபட சேவை ஆற்றா
எந்த அரசும் துறையும் ஈடேற சாரமில்லை என்பேன்
8. என்கவே அன்னதனால் ஊழல் வஞ்சக
எதேச்ச அதிகார போக்கை மாற்றி
நன்மைதரும் ஞான ஆட்சியாக
ஞானிகளை வணங்கி வந்து சேவை ஆற்றிட
9. ஆற்றிட இந்திய தமிழக ஆளுமைகள்
ஆபத்தான ருண சுமையை வென்று
மாற்றமாக ஏற்றம்தரும் வண்ணம்
மற்ற தேசங்களின் முதலீடுகள் பெருகி
10. பெருகியே தொழில் தனவளர்ச்சிபட
பிரச்சினையான சகல நெருக்கடியும் விலகி
பெருமளவாய் பொருளாதாரமேம்பாடு கண்டு
பின்னடைவு இல்லா ஆளுமையாகச் சிறக்கும்
11. சிறக்கவே சித்திமிகு அரங்கமகான்
சித்த நெறிகளை ஏற்றுவர
மறுக்கா வரம்பல கிட்டி தேசமும்
மக்களும் பெரும் பாதுகாப்பை அடைவர்
வார ஆசி முற்றே

—சுபம்—

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் பங்குனி மாதம் **26** ம் நாள் **09.04.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் சோபகிருது வருடம் சித்திரை மாதம் **03** ம் நாள் **16.04.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

அறம் என்கின்ற தர்மசக்தி பெருகி வளர்ந்து இவ்வுலக மக்களின் பசிப்பிணியை விரட்டி இவ்வுலக மக்களை காத்திடவே ஜோதி சொரூபன் முருகப்பெருமானை வெளிப்படும் விதமாக சரவண ஜோதி தனை அருளி வழிபாடுகளை செய்து சோதிவடிவாக உலக மக்களுக்கு அருள்செய்து காக்கின்ற சற்குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகரே. உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் வார ஆசிதனை இந்தியா தமிழகம் தன்னிலே சுபகிருது வருடம் பங்குனிமாதம் **26** ம் நாள் **09.04.2023** ஞாயிற்றுகிழமை முதல் சோபகிருது வருடம் சித்திரை மாதம் **03** ம் நாள் **16.04.2023** ஞாயிற்றுகிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தற்காலம் நாடெங்கிலும் சூரிய வெப்பம் அதிகமாகி குடிநீர் தட்டுப்பாடும், நீர் ஆதாரங்கள் குறைவினாலே வறட்சியும் மிகுதியாகி பலப்பல கிராமங்களில் மக்கள் வாழ்வாதரம் பாதிக்கப்பட்டு பெரும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளார்கள்.

ஆகையினாலே ஆட்சி புரிபவர்கள் மக்கள், மீது கருணைகொண்டு தயவுடன் நடப்பதுடன் மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு தானதருமங்களை அதிகமாக்கி அரசுஅளிக்கும் தான தருமங்கள் மக்களை முழுமையாக சென்றடையும் வண்ணம் தொண்டுள்ளத்தோடு சேவையாற்றி மக்களின் வறுமை நிலையை போக்கி வளர்ச்சி திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திட வேண்டும். மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் விதமாக செயல்பட வேண்டும்.

இவ்விதம் செயல்பட இந்தஉலகமே வியக்குமாறு தேசம் மாற்றம் அடையும் தூய்மையான எண்ணங்களுடன் சேவைமணப்பான்மையோடு செயல்படாத எந்த அரசும் முழுமைபெற சாரம் இல்லையப்பா.

ஆதலினாலே ஊழல், வஞ்சனை, ஏதேச்சதிகாரம் செய்தல் என்கின்ற மோசமான துன்பம் அளிக்கும் நிலைகளை போக்கி மக்களுக்கு முழுதும் நன்மை அளிக்கின்ற ஞான ஆட்சியர்கள் ஆட்சி புரிந்திட தேசம் கடன் சுமையில் இருந்து விடுபடும் அன்னிய தேச முதலீடுகளை அதிகமாக பெற்று தொழில் துறை வளர்ச்சி அடைந்து. பொருளாதாரமும் வளர்ச்சி அடைந்து சகல விதமான நெருக்கடிகளும் விலகி வருவாய் பெருகி பின்னடைவு ஏதும் இல்லாத ஆட்சியாக சிறப்படையும்.

சிறப்பான ஆட்சி முறையினை செய்திட வேண்டுமாயின் எல்லா விதமான வெற்றிகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்க மகானின் சித்தர் வழிபாடுகளை

செய்து வருவதுடன் ஞான நெறிகளை ஏற்று கடைபிடித்து வரவர பல வரங்களை வாழ்வில் அவர்கள் பெற்று நாடும் வீடும் பெரும் பாதுகாப்பை பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

**–சுபம்–**